1968 மார்ச் 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

சுகாதாரத்தையும், தூய்மையையும் மேம்படுத்துவதிலும் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. நகராட்சியின் பணியிலுள்ள 16 கோட்ட மேற்பார்வையாளர்களும், காலரா சிகிச்சைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், சுகாதார உதவியாளர்களிலிருந்து 5 காலரா மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நகராட்சியின் ஏனைய 11 சுகாதார உதவியாளர்களும், காலரா சிகிச்சைப் பணியையே கவனித்து வருகின்றனர். மேற்கூறிய பணியாளர்களின் பணியினை 4 தேர்வுத்தர சுகாதார மேற்பார்வையாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஊசி போடுவது தவிர, நீர் நிலையில் குளோரின் கலத்தல், மருந்து தூவி கிருமி நீக்குதல், நோயாளிகளைத் தனிப்படுத்தி சிகிச்சையளித்தல் முதலான கட்டுப்பாடு நடவடிக்கைகளும் முறைப்படி நிறைவேற்றப்பட்டன. மாவட்டச் சுகாதார அதிகாரியும், திருச்சிராப்பள்ளி நகராட்சிச் சுகாதார அதிகாரியும் நிலைமையை விழிப்புடன் கவனித்து வருமாறும், காலரா பீடித்த பகுதிகளிலும், பீடிக்காத பகுதிகளிலும் இயன்ற அளவில் எல்லா மக்களுக்கும் ஊசி போட்டு, காலராவை இயன்ற விரைவில் கட்டுப்படுத்திக் குறைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பொதுச்சுகாதாரப் பணியாளரின் பணியினைக் கண்டிப்புடன் மேற்பார்வையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் தூய்மை பேணப்படும் பொருட்டு, அவற்றைக் குறித்த காலத்திற்கொருமுறை சென்று பார்வையிடும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிலைமை தொடர்ந்து விழிப்புடன் கவனிக்கப்பட்டு வருகிறது. காலரா மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் கவனத்திற்கு திரு. க. இராமமூர்த்தி ஒரு காரியத்தைக் கொண்டு வரவேண்டும். ஆனால், அவர் இடத்தில் இல்லாததால், கவன ஈர்ப்புத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(xi) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் விநியோகம் அடிக்கடி நிறுத்தப்படுதல்.

THIRU M. RAJANGAM : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, the frequent stoppage of water supply on several occasions in the Combined Water Supply Scheme in Madurai district in areas like Gudalur, Cumbum, Pudupatti, Hanumanthanpatti, Uthamapalayam, Chinnamanur and Kamaya Goundanpatti, Markayankottai, etc., and the consequent difficulties experienced by the public in those areas especially ladies on account of drinking of non-protected water available and the necessity to take immediate and urgent steps to solve this problem.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, a Comprehensive Water Supply Scheme for the following places was sanctioned in 1955 at an estimated cost of Rs. 43.75 lakhs. The scheme has been put to beneficial use in 1958 :—

(1) Gudalur;
(2) Cumbum;
(3) Kamaya Goundanpatti;
(4) Pudupatti;
(5) Hanumanthanpatti;
(6) Uthamapalayam;
(7) Markayankottai; and
(8) Chinnamanur.

The source of supply is the tail race from the Periyar Power House. During closure period for attending to repairs to irrigation works there will be little or no flow in the river thus making the water-supply off-take not functioning properly. In order to facilitate the diversion of surface flow of water, a bed dam across Periyar river just below the off-take arrangements is being constructed. Proposals for constructing two stand pipes, one at Gudalur and the other at Uthamapalayam are under preparation. When the works on construction of bed dam and stand pipes are completed, the water-supply to Cumbum and other Panchayats will be maintained without interruption.

திரு. மா. இராசாங்கம் : . தலைவர் அவர்களே, விவசாயப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுப்பதற்காக, பொதுப்பணியிலிருந்து வாய்க்கால் வெட்டி, அந்த முறையில் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தடுக்க நடவடிக்கை நிறைவேற்றுவதுபோல; குடிநீர் வசதிக்கும் வாய்க்கால் வெட்டி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினருடைய கருத்தையும் மனதில் கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(xii) காரைக்குடி முனிசிபல் பகுதியில் உணவில் விஷக் கலப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய மருத்துவ வசதி அளிக்கப்படாமை

THIRU S. MEYYAPPAN : Sir, I call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely, " about 120 persons of Meenakshipuram area in Karaikudi Municipal limit were affected by food poisoning on 6th March 1968 and as there was no adequate space and medicine in the Government Hospital they were not able to be given immediate, proper medical aid and the necessity to expedite the proposal to shift the hospital to Gandhi Maligai and provide all medical facilities ".